## சுருக்கம்

கல்லூரிகள்–நிதியுதவி பெறாத தனியார் கல்லூரிகள்–குஞ்சா கௌசல்யா அம்மாள் கோவிந்தராசன் கல்வி மற்றும் அறக்கட்டளை–2000–2001ம் கல்வியாண்டில் வேலூர் மாவட்டத்தில் கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்படுகிறது

---

உயர்கல்வி (இ1) துறை

அரசாணை நிலை எண்: 256 நாள் 4/7/2000.

படிக்கப்பட்டவை–

1. அரசாணை எண் 858 கல்வித் துறை, நாள் 15.7.89
2. அரசாணை எண் 244 உயர்கல்வித்துறை நாள் 7.5.97
3. அரசாணை எண் 165 உயர்கல்வித்துறை நாள் 23.4.98
4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண் 59943/ஆர்1/99 நாள், 16.5.2000

-----

**ஆணை:**

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் அம்மணாங்குப்பம் என்னுமிடத்தில் கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்னும் இருபாலர் பயிலும் கல்லூரியினை சுயநிதி அடிப்படையில் தொடங்கக்கோரும் மனுவை குஞ்சா கௌசல்யா அம்மாள் –கோவிந்தராசன் கல்வி மற்றும் அறக்கட்டளை அனுப்பிவைத்துள்ளதாக பார்வை 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக்கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார். இக்கல்வி முகமை கீழ்க்கண்டவற்றை நிறைவு செய்துள்ளதாகவும் கல்லூரிக்கல்வி இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார்.

(i) கல்லூரிக்கல்வி இயக்குநர் மற்றும் குஞ்சா கௌசல்யா அம்மாள் கோவிந்தராசன் கல்வி மற்றும் அறக்கட்டளையின் கூட்டுக் கணக்கு பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகத்தில் அறக்கட்டளைத் தொகையான ரூ 20 இலட்சம் கல்வி முகமையால் ஐந்து ஆண்டுகளுக்கு வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

ii) இக்கல்வி முகமை வேலூர் மாவட்டத்தில் காட்பாடி வட்டம் அம்மணாங்குப்பம் என்னும் கிராமத்தில் இக்கல்லூரிக்கென தம்முடைய விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்களில் 10.31 ஏக்கர் நிலத்தை 55 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வாங்கியுள்ளது.

iii) அரசு விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து ஒப்பந்தப் பத்திரம் ஒன்றை கல்விமுகமை அளித்துள்ளது.

2. கல்லூரிக்கல்விஇயக்குநரால் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ———— மேற்காண் கருத்துருவை, அரசு, நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (KMG COLLEGE OF ARTS & SCIENCE) என்னும் இருபாலர் பயிலும் தனியார் சுயநிதிக் கல்லூரியை வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம்

அம்மனான்குப்பம் என்னும் கிராமத்தில் 2000–2001ம் கல்வியாண்டில் கீழ்க்காணும் பாடப்பிரிவுகளுடன் தொடங்க அனுமதி அளிக்கிறது

1, பி.எஸ்சி. (கணிப்பொறி அறிவியல்)
2. பி.சி.ஏ.
3. பி.எஸ்சி. (பயோ கெமிஸ்ட்ரி)
4. பி.பி.ஏ
5. பி.காம்.

3. 2000–2001-ம் கல்வியாண்டில் மேலே பத்தி 1 (ii) ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தில், நிரந்தர கட்டடங்கள் கட்டி முடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் குடியாத்தம், பிச்சனூர் பாமநேர் சாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் மேல்நிலைப்பள்ளியில் கல்லூரி தற்காலிகமாக செயல்பட கல்வி முகமைக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

4. கல்லூரியில் மேற்காண் பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு முன்பாக இக்கல்லூரியின் தற்காலிக கட்டிடங்களின் உறுதித்தன்மை பற்றிய சான்றிதழை கல்வி முகமை கல்லூரிக்கல்வி இயக்குநருக்கு அனுப்பிவைக்க வேண்டும். கட்டடம் கட்டுவதற்கான அனுமதியை உரிய பெருநகர் குழுமத்திடமோ அல்லது ஊராட்சி மன்றத்திடமோ பெறவேண்டும். மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்ட கல்லூரி கீழ்க்காணும் நிபந்தனைகளை மேலும் நிறைவு செய்யவேண்டும்.

(அ) 2000–2001ம் கல்வியாண்டிற்குள், அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக் கழகத்தின் இசைவு பெறுதல் வேண்டும்.

(ஆ) பத்தி 1 (ii) ல் தெரிவிக்கப்பட்ட இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

(இ) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எந்தவருடத்திலும் இக்கல்லூரிக்கு வழங்காது.

(ஈ) பார்வையில் படிக்கப்பட்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்யவேண்டும்.

(உ) அரசு/பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் சார்ந்த பாடங்களேயன்றி வேறு எந்த பாடங்களையும் கல்விமுகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.

(ஊ) பல்கலைக் கழகம் நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் அமர்த்தப்படவேண்டும்.

(எ) கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எந்தவிதத்திலும் பெறக்கூடாது.

(ஏ) அரசு/கல்லூரிக்கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம் விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம் ஆய்வகக்கட்டணம் காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்

(ஐ) கல்விமுகமை/அரசு/ கல்லூரிக்கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணாக்கர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும், மேலும் அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து 50% இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

(ஒ) கல்விமுகமை இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில் அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

(ஓ) அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பின்னர் உரிய அறிக்கை பெற்று, ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டடத்தில், அனைத்து வசதிகளுடன், சிறந்த முறையில் செயற்பட்டு வந்தால் மட்டுமே தொடர்ந்து இக்கல்லூரி செயல்பட அனுமதிக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இலம்பலைவண்ணன், இ.ஆ.ப.
அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை-6
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், வேலூர்
பதிவாளர், சென்னை பல்கலைக்கழகம் சென்னை-5
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு கல்வி அமைச்சரின் நேர்முகச் செயலாளர், சென்னை-9.
தலைவர்/செயலர், குஞ்சா கௌசல்யா அம்மாள் -கோவிந்தராசன் கல்வி மற்றும் அறக்கட்டளை,
24, பிள்ளையார் கோயில் தெரு, குடியாத்தம் வேலூர் மாவட்டம்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.